உங்கள் அபிமான தின தமிழ்
செய்திகளை உடனுக்குடன் தெரிந்து கொள்ள
வாட்ஸாப்பில் பின்தொடரவும்...

. 4 பக்கங்கள் . விலை ரூ. 5

# தின தமிழ்

தினசரி காலை நாளிதழ்
DHINA TAMIL
RNI No : TNTAM/2023/85936

வாசிப்பை சுவாசிப்போம்! கைபேசியை தவிர்ப்போம்!
செய்தித்தாள் வாசிப்பை வழக்கமாக்கிக் கொள்வோம்!

www.dhinatamil.com • மாற்றத்தின் ஆரம்பம் • dhinatamil

• பதிப்பு : நாகர்கோவில் • 14.05.2026 • மலர் 04 • இதழ்: 134 • Edition : Nagercoil • 14.05.2026 • Vol : 04 • Issue : 134 • Page : 4 • Rs. 5/-

### எரிபொருள் சிக்கனம்: 2 பாதுகாப்பு வாகனங்களுடன்

# அமைச்சரவை கூட்டத்திற்கு சென்ற பிரதமர்

## பிரதமர் மோடி அறிவுரை



புதுடெல்லி, மே. 14

அமெரிக்காவும், இஸ்ரேலும் ஈரான் நாட்டை கடந்த பிப்ரவரி இறுதியில் தாக்கியது. இந்த தாக்குதல் தொடர்ந்த நிலையில், ஹார்மூஸ் ஜலசந்தியை ஈரான் மூடியது. கண்ணிவெடிகளையும் புதைத்து வைத்தது. இந்த பகுதியில் நாள்தோறும் நூற்றுக்கும் மேற்பட்ட சரக்கு கப்பல்கள் கடந்து செல்ல கூடிய நிலையில், ஈரான் நடவடிக்கையால் கப்பல் போக்குவரத்து கடுமையாக பாதிக்கப்பட்டு உள்ளது.

இந்த மேற்காசிய போரால் உலகளாவிய அளவில் எரிபொருள் விலை ஏற்றம் கண்டு வருகிறது. இதனை முன்னிட்டு, பெட்ரோல் மற்றும் டீசல் பயன்பாட்டை குறைத்து கொள்ள வேண்டும் என்று பிரதமர் மோடி கடந்த 10 ந்தேதி பேசும்போது, நாட்டு மக்களிடம் வேண்டுகோளாக கேட்டு கொண்டார்.

இந்திய பொருளாதாரம் வலுப்படுவதற்காகவும், அந்திய செலாவணி இருப்பை பாதுகாக்கும் நோக்கிலும் இத்திட்டங்களை அவர் கூறினார். வீட்டில் இருந்து பணிபுரிதலை ஊக்குவிக்கவும், ஓராண்டுக்கு தங்கம் வாங்க வேண்டாம் என்றும், எரிபொருள் நுகர்வை குறையுங்கள் என்பன உள்பட பல்வேறு விசயங்களை பற்றி அவர் பேசினார்.

இதற்கு எடுத்துக்காட்டாக தன்னுடைய பாதுகாப்பு வாகனங்களின் எண்ணிக்கையை பாதியாக குறைக்க சிறப்பு பாதுகாப்பு படைக்கு பிரதமர் மோடி உத்தரவிட்டார்.

இதேபோன்று, தமது பாதுகாப்பு வாகனங்களில் மின்சார கார்களை கூடுதலாக பயன்படுத்தவும் யோசனை வழங்கிய அவர், இந்த மாற்றத்திற்காக புதிய வாகனங்களை வாங்க கூடாது என்றும், இருப்பில் உள்ள வாகனங்களையே பயன்படுத்த வேண்டும் என்றும் பிரதமர் தெரிவித்துள்ளார்.

பிரதமர் மோடியின் வேண்டுகோளுக்கு ஏற்ப, மத்திய பாதுகாப்பு துறை மந்திரி ராஜ்நாத் சிங் தன்னுடைய பாதுகாப்பு வாகனங்களின் எண்ணிக்கையை பாதிக்கும்கீழாககுறைத்திருக்கிறார். இந்த நிலையில், எரிபொருள் சிக்கனம் பற்றி பிரதமர் மோடி குறிப்பிட்ட நிலையில், அவருடைய பாதுகாப்பு வாகன எண்ணிக்கை வெகுவாக குறைக்கப்பட்டு உள்ளது. இதன்படி 2 பாதுகாப்பு வாகனங்களுடன் அமைச்சரவை கூட்டத்திற்கு பிரதமர் மோடி இன்று சென்றார். அவருடைய வாகனம் மற்றும் அவருடன் பாதுகாப்பு வாகனம் ஒன்று என மொத்தம் 2 வாகனங்களே சென்றுள்ளன.

பொதுவாக 30 பாதுகாப்பு வாகனங்களுடன் எஸ்.பி.ஜி. எனப்படும் சிறப்பு பாதுகாப்பு காவல் படையினருடன் தலைவர்களின் வாகன பயணம் அமைந்திருக்கும். பிரதமருக்கும் இது போன்ற பாதுகாப்பு வழங்கப்பட்டு வந்தது. இந்த நிலையில், அவர் மொத்தம் 2 வாகனங்களுடன் பயணம் செய்துள்ளார்.

இதனால், எரிபொருள் சிக்கனம் என பேசியதுடன்நில்லாமல், பிரதமர் மோடி அதனை செயல்படுத்தியும் காட்டியிருக்கிறார்.

## நம்பிக்கை வாக்கெடுப்பில் வெற்றி ஆட்சியை தக்க வைத்தது தவெக?"



சென்னை, மே. 14

தமிழக சட்டசபையில் தவெக அரசு தனது பெரும்பான்மையை நிரூபிக்க நம்பிக்கை வாக்கெடுப்பு இன்று நடைபெற்றது.

முதல்அமைச்சர் விஜய் கொண்டு வந்த நம்பிக்கை தீர்மானம் மீதான விவாதத்திற்கு பிறகு வாக்கெடுப்பு நடைமுறை தொடங்கியது. உறுப்பினர்களை எண்ணிக் கணிக்கும் நடைமுறைப்படி வாக்கெடுப்பு நடத்தப்படும் என சபாநாயகர் அறிவித்தார். வெளியில் சென்ற உறுப்பினர்களை அவைக்கு அழைக்கும் வகையில் 3 முறை மணி ஒலிக்கப்பட்டது. பின்னர் பேரவையின் நுழைவு வாயில்கள் அனைத்தையும் மூடும்படி அவைக்காவலர்களுக்கு சபாநாயகர் உத்தரவிட்டார். கதவுகள் மூடப்பட்டதும் வாக்கெடுப்பு நடத்தப்பட்டது.

தீர்மானத்திற்கு ஆதரவாக 144 எம்.எல்.ஏ.க்கள் வாக்களித்தனர். 22 எம்.எல்.ஏ.க்கள் எதிராக வாக்களித்தனர். 5 எம்.எல்.ஏ.க்கள் நடுநிலை வகித்தனர். இதையடுத்து தீர்மானம் வெற்றி பெற்றதாக சபாநாயகர் அறிவித்தார். வாக்கெடுப்பின் போது திமுக எம்.எல்.ஏ.க்கள் அவையில் இருந்து வெளிநடப்பு செய்தனர். 144 எம்.எல்.ஏ.க்கள் ஆதரவுடன் விஜய் தலைமையிலானதமிழக வெற்றிக் கழக அரசு பெரும்பான்மையை நிரூபித்து ஆட்சியை தக்க வைத்தது.

## பிரதமர் மோடியின் வேண்டுகோளுக்கு ஏற்ப, பாதுகாப்பு வாகன எண்ணிக்கையை குறைத்த மத்திய மந்திரி ராஜ்நாத் சிங்



புதுடெல்லி மே. 14

அமெரிக்காவும், இஸ்ரேலும் ஈரான் நாட்டை கடந்த பிப்ரவரி இறுதியில் தாக்கியது. இந்த தாக்குதல் தொடர்ந்த நிலையில், ஹார்மூஸ் ஜலசந்தியை ஈரான் மூடியது. கண்ணிவெடிகளையும் புதைத்து வைத்தது. இந்த பகுதியில் நாள்தோறும் நூற்றுக்கும் மேற்பட்ட சரக்கு கப்பல்கள் கடந்து செல்ல கூடிய நிலையில், ஈரான் நடவடிக்கையால் கப்பல் போக்குவரத்து கடுமையாக பாதிக்கப்பட்டு உள்ளது.

இந்த மேற்காசிய போரால் உலகளாவிய அளவில் எரிபொருள் விலை ஏற்றம் கண்டு வருகிறது. இதனை முன்னிட்டு, பெட்ரோல் மற்றும் டீசல் பயன்பாட்டை குறைத்து கொள்ள வேண்டும் என்று பிரதமர் மோடி கடந்த 10 ந்தேதி பேசும்போது, நாட்டு மக்களிடம் வேண்டுகோளாக கேட்டு கொண்டார்.

இந்திய பொருளாதாரம் வலுப்படுவதற்காகவும், அந்திய செலாவணி இருப்பை பாதுகாக்கும் நோக்கிலும் இத்திட்டங்களை அவர் கூறினார். வீட்டில் இருந்து பணிபுரிதலை ஊக்குவிக்கவும், ஓராண்டுக்கு தங்கம் வாங்க வேண்டாம் என்றும், எரிபொருள் நுகர்வை குறையுங்கள் என்பன உள்பட பல்வேறு விசயங்களை பற்றி அவர் பேசினார்.

இதற்கு எடுத்துக்காட்டாக தன்னுடைய பாதுகாப்பு வாகனங்களின் எண்ணிக்கையை பாதியாக குறைக்க சிறப்பு பாதுகாப்பு படைக்கு பிரதமர் மோடி உத்தரவிட்டுள்ளார். வாகனங்கள் குறைக்கப்பட்டாலும், கட்டாய பாதுகாப்பு விதிமுறைகளில் எந்த மாற்றமும் செய்யப்படவில்லை.

இதேபோன்று, தமது பாதுகாப்பு வாகனங்களில் மின்சார கார்களை கூடுதலாக பயன்படுத்தவும் யோசனை வழங்கியுள்ளார். இந்த மாற்றத்திற்காக புதிய வாகனங்களை வாங்க கூடாது என்றும், இருப்பில் உள்ள வாகனங்களையே பயன்படுத்த வேண்டும் என்றும் பிரதமர் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில், பிரதமர் மோடியின் வேண்டுகோளுக்கு ஏற்ப, மத்திய பாதுகாப்பு துறை மந்திரி ராஜ்நாத் சிங் தன்னுடைய பாதுகாப்பு வாகனங்களின் எண்ணிக்கையைபாதிக்கும்கீழாக குறைத்திருக்கிறார்.

## 'முதல்அமைச்சர் விஜய் குதிரை பேரத்தில் ஈடுபடவில்லை': வைகோ கருத்து



சென்னை, மே. 14

தமிழக சட்டமன்றத்தில் த.வெ.க. அரசு தனது பெரும்பான்மையை நிரூபிக்க நம்பிக்கை வாக்கெடுப்பு இன்று நடைபெற்றது. முதல்அமைச்சர் விஜய் கொண்டு வந்த நம்பிக்கை தீர்மானம் மீதான விவாதத்திற்கு பிறகு வாக்கெடுப்பு தொடங்கியது. வாக்கெடுப்பின் போது திமுக எம்.எல்.ஏ.க்கள் அவையில் இருந்து வெளிநடப்பு செய்தனர்.

தீர்மானத்திற்கு ஆதரவாக 144 எம்.எல்.ஏ.க்கள் வாக்களித்தனர். 22 எம்.எல்.ஏ.க்கள் எதிராக வாக்களித்தனர். 5 எம்.எல்.ஏ.க்கள் நடுநிலை வகித்தனர். இதையடுத்து தீர்மானம் வெற்றி பெற்றதாக சபாநாயகர் அறிவித்தார். 144 எம்.எல்.ஏ.க்கள் ஆதரவுடன் விஜய் தலைமையிலான தமிழக வெற்றிக் கழக அரசு பெரும்பான்மையை நிரூபித்து ஆட்சியைதக்கவைத்தது.

இந்த வாக்கெடுப்பில் ம.தி.மு.க. எம்.எல்.ஏ.க்கள் 2 பேரும் கலந்து கொள்ளாமல் புறக்கணித்தனர். அவர்கள் இருவரும் சென்னையில் இன்று ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ தலைமையில் நடைபெற்ற கட்சியின் நிர்வாகக்குழு கூட்டத்தில் கலந்து கொண்டனர். இந்த கூட்டத்திற்கு பின்னர் வைகோ செய்தியாளர்களை சந்தித்து பேசினார். அப்போது அவர் கூறியதாவது;

"ம.தி.மு.க.வின் முக்கியமான நிர்வாகக்குழு இன்று நடைபெற்ற நிலையில், அதில் ம.தி.மு.க. எம்.எல்.ஏ.க்கள் இருவரும் கலந்து கொள்வது அவசியம் என்று நாங்கள் முடிவெடுத்த தால், அவர்கள் இந்த கூட்டத்தில் கலந்து கொண்டார்கள். அவர்கள் சட்டசபைக்கு சென்றிருந்தால் த.வெ.க.வுக்கு ஆதரவு தெரிவித்திருப்பார்களா? என்பது போன்ற கற்பனையான கேள்விகளுக்கெல்லாம் நாங்கள் பதில் சொல்ல முடியாது.

ஜோசப் விஜய் ஆட்சியை வரவேற்கிறோம் என்று நாங்கள் ஏற்கனவே சொல்லிவிட்டோம். விஜய்க்கு ஆதரவா? எதிர்ப்பா? என இப்போது கூற முடியாது. விஜய் அரசின் செயல்பாடுகளை 6 மாதங்கள் உற்று நோக்குவோம். தி.மு.க. கூட்டணியில் தொடர்கிறோம், தோழமை தொடரும்.

திராவிட கட்சிகளை தோற்கடிப்பதற்காக விஜய் அரசியலுக்கு வரவில்லை. தான் ஆட்சியமைக்க வேண்டும் என்று தான் விஜய் அரசியலுக்கு வந்தார். அ.தி.மு.க. ஆதரவு கொடுப்பதற்கு முன்பே விஜய்க்கு பெரும்பான்மை இருந்தது. அ.தி.மு.க. ஆதரவு தெரிவிக்கும்போது வேண்டாம் என விஜய் சொல்வாரா?

விஜய் குதிரை பேரத்தில் ஈடுபடவில்லை என்பது என் கருத்து. 717 டாஸ்மாக் கடைகளை மூடிய முதல்அமைச்சரின் செயலுக்கு நன்றி. தமிழகத்தில் பூரண மதுவிலக்கை முதல்அமைச்சர் விஜய் தலைமையிலான அரசு அமல்படுத்த வேண்டும்."

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

தின தமிழ்

நிருபர்கள் தேவை

வெற்றிகரமாக தொடர்ந்து 4 ஆண்டுகளாக

தமிழகம் முழுவதும் பிரிண்ட் ஆகி வெளிவந்து கொண்டிருக்கும் தின தமிழ் நாளிதழுக்கு மாவட்ட வாரியாக நிருபர்கள் மற்றும் போட்டோகிராபர்கள் தேவை

தகுதிகள்

குற்றவழக்குகள் இருக்கக் கூடாது, முன் அனுபவம், பட்டதாரி, தமிழில் உரையாடுதல், தமிழில் பிழையின்றி எழுதுதல், தகவல் பரிமாற்றத் திறன்

மேற்கண்ட தகுதிகள் பெற்றிருப்பவர்கள் கீழ்க்கண்ட எண்ணிற்கு தொடர்பு கொள்ளலாம்

99944 66200 – 70102 64701

## உளவுத்துறை ஐஜியாக அஸ்ரா கர்க் நியமனம்: தமிழக அரசு உத்தரவு



சென்னை, மே. 14

வடக்கு மண்டல ஐஜியாக உள்ள அஸ்ரா கர்க், உளவுத்துறை ஐஜியாக நியமனம் செய்யப்பட்டுள்ளார். உளவுத்துறை ஐஜியாக தேர்தல் ஆணையத்தால் நியமனம் செய்யப்பட்டு இருந்த அவினாஷ்குமார் மாற்றப்பட்டு புதிய ஐஜியாக அஸ்ரா கர்க் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

2004 ஆம் ஆண்டு ஐபிஎஸ் கேடரை சேர்ந்த அஸ்ரா கர்க், நேர்மையானஅதிகாரிஎன்றபெயரைபெற்றவர். கரூர் கூட்ட நெரிசல் வழக்கை சிபிஐ விசாரிக்கும் முன்பாக, தமிழக அரசு அமைத்த சிறப்பு புலனாய்வு குழுவின் தலைவராக அஸ்ரா கர்க்கே நியமனம் செய்யப்பட்டு இருந்தது குறிப்பிடத்தக்கது.

## புதுச்சேரி முதல்மந்திரியாக பதவியேற்றார் ரங்கசாமி



புதுச்சேரி, மே. 14

புதுச்சேரி சட்டசபை தேர்தலில் தேசிய ஜனநாயக கூட்டணியில் என்.ஆர்.காங்கிரஸ் 12 தொகுதிகளிலும், பா.ஜனதா 4 தொகுதிகளிலும், அ.தி.மு.க., லட்சிய ஜனநாயக கட்சி தலா ஒரு இடத்திலும் வெற்றி பெற்றது. இதனை தொடர்ந்து நடந்த தேசிய ஜனநாயக கூட்டணி கட்சிகள் எம்.எல்.ஏ.க்கள் கூட்டத்தில் கூட்டணி தலைவராக ரங்கசாமி தேர்வு செய்து, ஆதரவு கடிதம் வழங்கினர்.

இதையடுத்து அவர் கவர்னர் கைலாஷ்நாதனை சந்தித்து ஆட்சி அமைக்க உரிமை கோரினார். அதற்கு ஜனாதிபதி ஒப்புதல் அளித்த நிலையில் ஆட்சி அமைக்க வருமாறு ரங்கசாமிக்கு கவர்னர் அழைப்பு விடுத்தார். இதனை தொடர்ந்து முதல்மந்திரி ரங்கசாமி நேற்று முன்தினம் கவர்னர் கைலாஷ்நாதனை சந்தித்து பேசினார். அப்போது புதிய அமைச்சரவை பட்டியலை வழங்கினார். இந்தநிலையில் 5வது முறையாக புதுவை மாநில முதல்மந்திரியாக ரங்கசாமி இன்று (புதன்கிழமை) காலை 9.45 மணிக்கு பதவியேற்றார். இதற்கான விழா கவர்னர் மாளிகையில் நடைபெற்றது. கவர்னர் கைலாஷ்நாதன் பதவி பிரமாணமும், ரகசியகாப்புபிரமாணமும் செய்து வைத்தார்.

புதுச்சேரி மாநிலத்தின் 16வது சட்டமன்ற முதல் மந்திரியாக ரங்கசாமி கடவுள் மீது ஆணையிட்டு பதவி ஏற்றுக்கொண்டார். முதல்மந்திரி ரங்கசாமியை தொடர்ந்து பா.ஜனதாவை சேர்ந்த நமச்சிவாயம், என்.ஆர்.காங்கிரஸ் கட்சியை சேர்ந்த மல்லாடி கிருஷ்ணாராவ் ஆகியோர் அமைச்சர்களாக பதவியேற்றனர்.

இந்த பதவி ஏற்பு விழா கோலாகலமாக நடைபெற்றது. விழாவுக்காக கவர்னர் மாளிகையில் பந்தல் அமைக்கும் பணி இரவு பகலாக நடைபெற்றது. விழாவில் பா.ஜனதா தேசிய தலைவர் நிதின்நபின், மத்திய மந்திரி மன்சுக் மாண்டவியா, மாநில தலைவர் வி.பி.ராமலிங்கம் மற்றும் என்.ஆர்.காங்கிரஸ், அ.தி.மு.க., லட்சிய ஜனநாயக கட்சி உள்ளிட்ட கூட்டணி கட்சி நிர்வாகிகள், அரசு அதிகாரிகள் உள்பட பலர் பங்கேற்றனர்.

## தொட்டியம் அருகே

# குழந்தைகளை சுமந்தவாறு தீ மிதித்த பக்தர்கள்



திருச்சி, மே. 14

திருச்சி மாவட்டம் தொட்டியம் அருகே பாலசமுத்திரம் ஜெ ஜெ நகர் மகாமாரியம்மன்கோவில் தீமிதி திருவிழா ஏப்ரல் 23ல் காப்புக்கட்டுதலுடன் தொடங்கி கோலாகலமாக நடைபெற்றது. முக்கிய நிகழ்வான தீமிதி திருவிழாவில் திரளான பக்தர்கள் பக்தி முழக்க த்துடன்அக்னி குண்டத்தில் இறங்கினர். குழந்தைகளைத்தலையில்சுமந்தபடி பக்தர்கள் தீமிதித்தது மெய்சிலிர்க்க வைத்தது. மாவிளக்கு பூஜை, வான வேடிக்கை மற்றும் மஞ்சள் நீராட்டுடன் விழா நிறைவுற்றது.



# மனநலம் பாதிக்கப்பட்ட பெண் மீட்பு நிமிர்குழு நடவடிக்கை

சுசீந்திரம்,மே.14

திண்டுக்கல்லை சேர்ந்த அனுசியா (வயது 33) என்ற பெண்மணியை காணவில்லை என்று தக்கலைபகுதிநிமிர்குழுவை சேர்ந்த அதிகாரிகள் சமூக வலைதளங்களில் அறிவிப்பு செய்திருந்தனர், அந்த அறிவிப்பை நிமிர் குழுவுடன் இணைந்து நாம் ஒருவர் அறக்கட்டளையும் பல்வேறு குழுக்களில் இந்த செய்தியை அனுப்பி, பல்வேறு இடங்களில் இந்த பெண்மணியை தேடினார்கள். தேடுதலின் பலனாக நாகர்கோவில் பகுதியில் பார்வதிபுரம் அருகே இந்த பெண்மணியை கண்டுபிடித்தனர். சற்று மனநிலை பாதிக்கப்பட்ட அவர் தொடர்ந்து பல்வேறு பேருந்துகளில் ஏறிக் கொண்டும், சாலைகளில் குறுக்கே சென்று போக்குவரத்துக்கு இடையூறாகவும் இருந்து கொண்டிருந்தார். உடனடியாக நாகர்கோவில் பகுதி நிமிர் குழுவுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டு அவர்களின் உதவி யுடன்,வெள்ளி ச்சந்தை பகுதியில் அமைந்துள்ள அன்பாலயா மன நல காப்பகத்தில் அந்த பெண்மணியை சேர்த்தனர். மேலும் காவல்துறை மூலம் திண்டுக்கல் காவல் நிலையத்துக்கும்,அவருடைய பெற்றோருக்கும் தகவல் கொடுக்கப்பட்டது அவரது பெற்றோர்கள் வந்து அவரை அழைத்துச் செல்வதாக உறுதி அளித்தனர்.

இதற்கு பெரிதும் உதவியாக இருந்த கன்னியாகுமரி மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் ஸ்டாலின் கட்டுப்பாட்டில் செயல்படும் நிமிர் குழுவுக்கு, நாம் ஒருவர் அறக்கட்டளைக்கும் பொது மக்கள் நன்றி தெரிவித்தனர்.




## உலகிலேயே சுமார் 400 நாட்கள் நீடிக்கும் தவத்தை சென்னையில்

# ஜெயின் மதத்தின் கடினமான 'வர்ஷிதப்' தவம் மேற்கொண்டு உள்ளனர்

சென்னை, மே. 14

ஜெயின் மதத்தின் மிக நீண்ட மற்றும் கடினமான தவமாகக் கருதப்படும் 'வர்ஷிதப்', சென்னை சௌகார்பேட்டையில் உள்ள ஸ்ரீ ராஜேந்திரசூரி ஜெயின் அறக்கட்டளை சார்பில் உற்சாகமாகத் தொடங்கியுள்ளது.

DCS நியூஸ் இயக்குனர் டாக்டர் DC ஜெயின் அவர்களுக்கு, இந்த தவத்தை மேற்கொள்ளும் பக்தர்களுக்கு 'பியாசனா' (உணவு வழங்கும் முறை) செய்விக்கும் பாக்கியம்இன்றுகிடைத்தது.

தவத்தின் பின்னணி முதல் தீர்த்தங்கரரான பகவான் ரிஷபதேவ் 13 மாதங்கள் உணவின்றி இருந்த தியாகத்தை நினைவுகூரும் வகையில் கடை ப்பிடிக்கப்படுகிறது.

சுமார் 400 நாட்கள் நீடிக்கும் இந்ததவத்தில், ஒரு நாள் முழு உபவாசமும் (சுடவைத்த நீர் மட்டும்), அடுத்த நாள் சூரிய உதயத்திற்குப் பிறகு ஒரு இடத்தில் அமர்ந்து இரு முறை மட்டும் உணவு உண்ணும் 'பியாசனா' முறையும் பின்பற்றப்படும்.

இந்த ஆண்டு 'அதிக மாசம்' வருவதால், தவத்தின் காலம் வழக்கத்தை விட அதிகமாக இருக்கும்.


இது மார்ச் 11, 2026 அன்று தொடங்கி, 2027 அட்சய திருதியை அன்று நிறைவடையும். இந்த தவம் உடல் கட்டுப்பாட்டைத் தாண்டி, ஆன்மாவை தூய்மை ப்படுத்தும் ஒரு உன்னத முயற்சியாகக் கருதப்படுகிறது.

# திருச்சி: இன்ப அதிர்ச்சியில் விஜய் ரசிகர் மரணம்



திருச்சி, மே. 14

திருச்சி வண்ணாங்கோவில் பகுதியைச் சேர்ந்த ஜார்ஜ் வில்லியம் என்ற விஜய் தீவிர ரசிகர், விஜய் முதல்வராக பதவியேற்பதை தொலைக்காட்சியில் பார்த்தபோது நெஞ்சு வலிப்பதாக தனது மனைவி டயானாவிடம் கூறியுள்ளார். வலி அதிகமானதால் அக்கம் பக்கத்தினர் உதவியுடன் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டார். மருத்துவமனைக்கு செல்லும் வழியிலேயே அவர் உயிரிழந்தார். இன்ப அதிர்ச்சியில் அவருக்கு மாரடைப்பு ஏற்பட்டதாக தெரியவந்துள்ளது.



# முசிறி அருகே கிணற்றில் விழுந்த சிறுமி உயிருடன் மீட்பு

முசிறி, மே. 14

முசிறி அருகே காருகுடி கிராமத்தில் ஆடு மேய்க்கச் சென்ற 14 வயது தனுசுயா கிணற்றில் விழுந்தார்.

தகவல் அறிந்த முசிறி போலீசார் மற்றும் தீயணைப்புத் துறையினர் கயிறு கட்டி கிணற்றில் இறங்கி சிறுமியை உயிருடன் மீட்டனர். இந்த சம்பவம் அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தியது.

## கன்னியாகுமரியில்

# படகு சேவை 1 மணி நேரம் அதிகரிப்பு; கப்பல் போக்குவரத்து கழகம் அறிவிப்பு



கன்னியாகுமரி,மே.14

கன்னியாகுமரி கடல் நடுவில் அமைந்துள்ள பாறையில் சுவாமி விவேகானந்தர் மண்டபமும் அதன் அருகில் உள்ள மற்றொரு பாறையில் 133 அடி உயர திருவள்ளுவர் சிலையும் எழுப்பப்பட்டுள்ளது. இவற்றை இணைக்கும் வகையில் கடல் நடுவில் கண்ணாடி பாலம் அமைக்கப்பட்டுள்ளது. இந்த கண்ணாடி பாலம் திறக்கப்பட்ட பிறகு கன்னியாகுமரிக்கு வரும் சுற்றுலா பயணிகள் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்த வண்ணமாக உள்ளன. தினமும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலா ஆயிரக்கணக்கான பயணிகள் படகில் சென்று இந்த கண்ணாடி பாலத்தை பார்த்து வருகிறார்கள்.

இவற்றை பார்வையிட செல்லும் சுற்றுலா பயணிகளுக்கு வசதியாக தமிழக அரசு நிறுவனமான பூம்புகார் கப்பல் போக்குவரத்து கழகம் படகு போக்குவரத்தைநடத்திவருகிறது.காலை8மணியில் இருந்து மாலை 4 மணி வரை இடைவேளையின்றி படகு போக்குவரத்து இயக்கப்படுகிறது. மாலை 4 மணிக்கு பின்பும் வார விடுமுறை நாட்களில் கன்னியாகுமரியில் கட்டுக்கடங்காத கூட்டம் காணப்படும். இதனால் கண்ணாடி பாலத்தை பார்க்க படகு துறையில் கூட்ட நெரிசல் ஏற்படுகிறது. சுற்றுலா பயணிகள் இந்த கூட்டநெரிசலை பார்த்து படகில் பயணம் செய்ய முடியாமல் ஏமாற்றத்துடன் திரும்பிச்செல்கின்றனர்.எனவேபடகுபோக்குவரத்து நேரத்தை நீட்டிக்க வேண்டும் என்று சுற்றுலா பயணிகள் கோரிக்கை விடுத்தனர்.

இதைத்தொடர்ந்து குமரி மாவட்ட ஆட்சியர் அழகுமீனா அறிவுரையின் பேரில் பூம்புகார் கப்பல் போக்குவரத்துகழகம்படகுபோக்குவரத்துநேரத்தை கூடுதலாக ஒரு மணி நேரம் நீட்டிக்க உத்தரவிட்டுள்ளது. அதன்படி நேற்றுமுன்தினம் முதல் சுற்றுலா பயணிகளுக்கு வசதியாக படகு போக்குவரத்து நேரம் காலை 8 மணிக்கு பதிலாக காலை 7 மணிக்கு படகு சேவை தொடங்கப்பட்டுள்ளது.



துறையூரில் தாலூகா அலுவலக கட்டிடப் பணி ஆய்வு செய்த கலெக்டர் திருச்சி மாவட்டம் துறையூரில் புதிய தாலுக்கா அலுவலக கட்டிடப் பணிகள் நிறைவடையும் தருவாயில் உள்ளன. இந்தப் பணிகளை திருச்சி மாவட்ட ஆட்சியர் சரவணன் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். பணிகள் விரைவாக முடிவடைய அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.




## குளச்சல் நகர அதிமுக சார்பில்

# எடப்பாடி கே.பழனிச்சாமியின் 72 வது பிறந்தநாள் விழா

குளச்சல் மே 14

குளச்சல் நகர அதிமுக கழக அலுவலகத்தில் வைத்து அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி கே. பழனிச்சாமியின் 72 வது பிறந்தநாள்விழாநகர கழகச் செயலாளர் ஆண்ட்றோஸ் தலைமையில் கேக் வெட்டி கொண்டாடப்பட்டது. அதனைத் தொடர்ந்து கழகப் பொதுச்செயலாளர் எடப்பாடியார் எடுக்கும் எந்த முடிவுக்கும் குளச்சல் நகர கழகம் உறு துணையாக நிற்கும் என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இந்நிகழ்ச்சியில் ரவிந்திரவர்சன், அருள்தாஸ், சிட்டி ஷாகுல் ஹமீது, எஸ்.எம்,பிள்ளை, ஜார்ஜ் ரெஜி,குமார தாஸ்,இராஜ் குமார், பெலிக்ஸ் ராஜன், திக்குறிச்சி கனகராஜ், ஆன்றோ வின்சென்ட், முளகுமூடு சைமன் சுந்தர் சிங், முட்டம் ஆண்றனி ராஜ், ஸ்ரீதர், உட்பட பலர் கலந்து கொண்டனர்.



## களியக்காவிளையில்

# நோய்கள் கண்டறிதலுக்கான சிறப்பு ரத்த பரிசோதனை முகாம்

களியக்காவிளை, மே.14

திருவனந்தபுரம் அரசு பொது மருத்துவமனை நடமாடும் மருத்துவக் குழு மற்றும் நெய்யாற்றின்கரை தனியார் தொண்டு நிறுவனம் இணைந்து களியக்காவிளை பேருந்து நிலையம் அருகில் காசநோய், புற்றுநோய் உள்ளிட்ட பல்வேறு நோய்கள் கண்டறிதலுக்கான சிறப்பு ரத்த பரிசோதனை முகாம் நடைபெற்றது. இம் முகாமில் நீரிழிவு, உயர் ரத்த அழுத்தம் மற்றும் ஹீமோகுளோபின், கொலஸ்டிரால் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டது. மேலும் பொது மக்களிடமிருந்து ரத்தம் சேகரிக்கப்பட்டு அவை திருவனந்தபுரம் அரசு மருத்துவமனையில் ஆய்வகத்தில் பரிசோதிக்கப்பட்டு, பிரிசோதனை முடிவுகள் 2 நாள்களில் சம்பந்தப்பட்ட நபர்களிடம் தொடர்பு கொண்டு தெரிவிக்கப்படும் என்றும் காசநோய், புற்றுநோய், பால்வினை நோய்கள் குறித்த அறிகுறிகள் கண்டறியப்பட்டால் சம்பந்தப்பட்ட நபர்களுக்கு திருவனந்தபுரம் அரசு மருத்துவமனையில் உரிய சிகிச்சையளிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் மருத்துவக் குழுவினர் தெரிவித்தனர்.

நிகழ்ச்சியில் திருவனந்தபுரம் அரசு பொது மருத்துவமனை நடமாடும் மருத்துவக் குழு உறுப்பினர் விஷ்ணுபிரசாத் தலைமையில் லேப் டெக்னீஷியன் சபரிராஜ், களப்பணியாளர்கள் குமாரி, தங்கம் உள்ளிட்டோர் பங்கேற்றனர். களியக்காவிளை பேரூராட்சி மன்ற தலைவர் சுரேஷ் முகாமை தொடங்கி வைத்தார். பேரூராட்சி வார்டு உறுப்பினர் ரிபாய், சமூக ஆர்வலர்கள் மாகீன் அபுபக்கர், ஜெகதீஷ் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த பயணிகள் மற்றும் களியக்காவிளை சுற்றுவட்டாரப் பகுதிகளைச் சேர்ந்த பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.



கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலம், வார்டு எண்.83க்குட்பட்ட நேரு உள்விளையாட்டு அரங்கம் அருகில் அமைந்துள்ள மாநகராட்சி விளையாட்டு மைதானத்தில், கைப்பந்து, இறகு பந்து, கபடி மற்றும் வுஷூ (Wushu) உள்ளிட்ட பல்வேறு வகையான விளையாட்டுப் போட்டிக்கான உள்விளையாட்டு அரங்கங்கள் அமைக்கப்பட்டு வரும் பணிகளை மாநகராட்சி ஆணையாளர் மா.சிவகுரு பிரபாகரன் , நேரில் சென்று பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டு, பணிகளை விரைவாக மேற்கொள்ள சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார். உடன் மத்திய மண்டல உதவி ஆணையர் ச.நா.சண்முகம், உதவி பொறியாளர் சதீஷ்குமார் மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் உள்ளனர்.

### நாகர்கோவில் மாநகராட்சி 28 வது வார்டு

# குறுந்தெரு பூங்காவில் திடீர் ஆய்வு மேற்கொண்ட மேயர் மேரி பிரின்ஸி லதா



நாகர்கோவில் மே 14

நாகர்கோவில் மாநகராட்சி 28வது வார்டுக்குட்பட்ட கோட்டார் ஸ்ரீ சக்தி விநாயகர் கோவில் அருகிலுள்ள குறுந்தெரு மாநகராட்சி பூங்கா மற்றும் கழிவுநீர் ஓடை ஆகியவற்றை நாகர்கோவில் மாநகராட்சி (பொறுப்பு) மேயர் மேரி பிரின்ஸி லதா அதிகாரிகளுடன் இணைந்து ஆய்வு மேற்கொண்டார்.

நாகர்கோவில் மாநகராட்சி மேயர் நேற்று காலை திடீரென கோட்டார் பகுதியில் உள்ள 28 வது வார்டுக்கு உட்பட்ட குறுந்தெரும் பூங்கா மற்றும் அதன் சுற்றியுள்ள பகுதிகளில் அதிகாரிகளுடன் ஆய்வு செய்தார். அப்போது பூங்காவில் பொதுமக்கள் பயன்படுத்தி வந்த விளையாட்டு உபகரணங்கள் மற்றும் நடைபாதை தளங்கள் உடைந்த நிலையில் இருப்பதைக் கண்டு உடனடியாக அவைகளை சீரமைக்கவும், பழுதாகி காணப்படும் மின் கம்பங்களை சீரமைக்கவும், திறந்த நிலையில் காணப்பட்ட மின் கம்ப சுவிட்ச் போர்டு போன்றவற்றை முறைப்படி மூடி பொதுமக்கள் மற்றும் குழந்தைகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்த உத்தரவிட்டார்.

அதனைத் தொடர்ந்து பூங்காவின் பின் புறம் ஓடும் கழிவுநீர் ஓடையை பார்வையிட்ட அவர் ஓடையில் தண்ணீர் தேங்கி நிற்பதால் கொசுக்கள் உற்பத்தியாகி சுகாதார சீர்கேட்டை விளைவிக்கும் என்பதால் தேங்கி நிற்கும் கழிவு நீரை முறைப்படி சுத்தம் செய்து கழிவுநீர் தங்கு தடை இன்றி செல்ல வழிவகை செய்யவும் பூட்டி வைக்கப்பட்டுள்ள கழிப்பிட கட்டிடத்தை சுத்தம் செய்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவர நடவடிக்கை மேற்கொண்டார். மேலும் பூங்காவில் பொதுமக்கள் பயன்பாட்டிற்காக குப்பைத்தொட்டி வைக்கவும், தினந்தோறும் பூங்காவை சுத்தம்செய்துசுகாதாரமாக வைத்திருக்கவும், தடையின்றி குடிநீர் கிடைக்க வழிவகை செய்யவும் அதிகாரிகளை கேட்டுக் கொண்டார்.

இந்த ஆய்வில் சுகாதார ஆய்வாளர் ஸ்டாலின் குமார், மாமன்ற உறுப்பினர் அனந்தலட்சுமி, வட்ட செயலாளர் முத்து கிருஷ்ணன், முன்னாள் நகர்மன்ற உறுப்பினர் பெஞ்சமின், வட்ட பிரதிநிதி செல்வம் மற்றும் மாநகராட்சி அதிகாரிகள் பணியாளர்கள் கலந்து கொண்டனர்.



### பறையங்குளம் கிராமத்தில்

# கருவேல மரங்கள், குப்பை தேக்கம் காரணமாக மர்ம காய்ச்சல் பரவும் அபாயம் – பொதுமக்கள் அச்சம்

கமுதி மே 14

ராமநாதபுரம் மாவட்டம் கமுதி அருகே உள்ள காத்தனேந்தல் ஊராட்சி பறையங்குளம் கிராமத்தில், வீடுகளைச் சுற்றிய பகுதிகளில் அதிக அளவில் கருவேல மரங்கள் வளர்ந்து அடர்ந்த நிலையில் காணப்படுவதால், அப்பகுதியில் குப்பைகள் தேங்கி சுகாதார சீர்கேடு ஏற்பட்டுள்ளதாக பொதுமக்கள் குற்றச்சாட்டு தெரிவித்து வருகின்றனர். குறிப்பாக, கருவேல மரங்கள் சூழ்ந்த பகுதிகளில் குப்பைகள் அகற்றப்படாமல் தேங்கிக்கிடப்பதால், அதில் விஷ பூச்சிகள், பாம்புகள் உள்ளிட்ட ஆபத்தான உயிரினங்கள் தங்கி, வீடுகளுக்குள் புகுந்து பொதுமக்களை அச்சுறுத்தும் நிலை உருவாகியுள்ளது. இதனால் குழந்தைகள், முதியவர்கள் உள்ளிட்டோர் மிகுந்த பயத்தில் வாழ்ந்து வருகின்றனர். மேலும், குப்பைகளில் மழைநீர் மற்றும் கழிவுநீர் தேங்குவதால் கொசுக்கள் அதிக அளவில் உற்பத்தியாகி, கிராமத்தில் மர்ம காய்ச்சல் பரவும் சூழ்நிலை தீவிரமடைந்துள்ளதாக கூறப்படுகிறது. மழைக்காலங்களில் உயிரிழப்பை ஏற்படுத்தும் அளவுக்கு காய்ச்சல் பரவும் நிலையில், தற்போது கோடைகாலத்திலும் மர்ம காய்ச்சல் தீவிரமாக பரவி வருவதாக பொதுமக்கள் வேதனை தெரிவிக்கின்றனர். இதுகுறித்து கிராமத்தைச் சேர்ந்த சமூக ஆர்வலர் முருகேசன் மகன் ராமர் கூறுகையில், கிராமத்திற்குள் தனிப்பட்ட நபர்களின் இடங்களிலும் அதிக அளவில் கருவேல மரங்கள் வளர்ந்து காணப்படுகின்றன. இதனால் சுகாதார பாதிப்புகள்நாளுக்குநாள் அதிகரித்து வருகிறது. பொதுமக்களின் உயிர் பாதுகாப்பை கருத்தில் கொண்டு, உடனடியாக கருவேல மரங்களை அகற்றி, குப்பைகளை முழுமையாக சுத்தம் செய்யமாவட்டநிர்வாகம் மற்றும் சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகள் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும், என்று வலியுறுத்தினார்.

இதனால், பறையங்குளம் கிராமத்தில் நிலவி வரும் சுகாதார அச்சுறுத்தலை கட்டுப்படுத்த மாவட்ட நிர்வாகம் உடனடி நடவடிக்கைஎடுத்து, பொதுமக்களின் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும் என சமூக ஆர்வலர்களும் பொதுமக்களும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

### ஈரோடு மாவட்டத்தில்

# 39 டாஸ்மாக் மதுபான கடைகளை மூட நடவடிக்கை

ஈரோடு மே 14

தமிழ்நாடு முழுவதும் வழிபாட்டு தலங்கள், பள்ளி, கல்லூரிகள், பஸ்நிலையங்கள்ஆகியவற்றின் அருகே 500 மீட்டர் தொலைவுக்குள் செயல்படும் டாஸ்மாக் மதுபான கடைகளை மூட தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது. இதன்படி தமிழ் நாடு முழுவதும் மொத்தம் 717 கடைகளை மூடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இந்த கடைகள் 2 வாரங்களில் மூடப்படும் என்று தமிழக அரசு அறிவித்துள்ளது. இதன் படி ஈரோடு மாவட்டத்தில் வழிபாட்டு தலங்கள், பள்ளிகள், கல்லூரிகள், பஸ் நிலையம் அருகே உள்ள 39 கடைகளை மூட பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது. இது பற்றி அதிகாரிகள் கூறும்போது ஈரோடு மாவட்டத்தில் மொத்தம் 183 டாஸ்மாக் மதுபான கடைகள் உள்ளன. இதில் அரசு உத்தரவுப்படி 39 கடைகள் செயல் படுவது கண்டறியப் பட்டுள்ளது. இந்த கடைகளின் பட்டியல் ஆய்வு செய்யப்பட்டு உயர்அதிகாரிகளுக்கு அனுப்பி வைக்கப்படும் இதன் பிறகு முறையான உத்தரவு வந்ததும் 39 டாஸ்மாக் மதுபான கடைகளும் 2 வாரத்தில் மூடப்படும் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்த கடைகளில் பணிபுரியும் மேற்பார்வையாளர்கள்மற்றும்ஊழியர்கள்வேறுகடைகளுக்குமாற்றம் செய்யப்படுவார்கள் என்றும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

### நாகர்கோவில் அருகே

# மோட்டார் சைக்கிள் விபத்தில் வாலிபர் பலி

சுசீந்திரம், மே. 14

பள்ளம் வடக்கு தெருவை சேர்ந்தவர் ஜெஸ்டின் ராஜா இவரது மகன் மனிஷ்ரதன் வயது 28 இவர்கள் தற்போது நாகர்கோவில் அருகே உள்ள என். ஜி. ஓ. காலனி பகுதியில் வசித்து வருகின்றனர்.

நேற்று முன்தினம் மாலை 4 மணியளவில் மனிஷ்ரதன் தனது மோட்டார் சைக்கிளில் மேலகிருஷ்ணன்புதூரில் இருந்து என். ஜி. ஓ. காலனி நோக்கி வந்து கொண்டிருக்கும் பொழுது நாகர்கோவில் அருகே உள்ள பிள்ளையார்புரம் சிவந்தி ஆதித்தனார் கல்லூரி மைதானம் அருகில் வந்து கொண்டிருக்கும் பொழுது நாகர்கோவிலில் இருந்துமேலகிருஷ்ணாபுதூர்நோக்கிவந்தமற்றொரு மோட்டார் சைக்கிள் மனிஷ்ரதன் ஓட்டி வந்த மோட்டார் சைக்கிள் மீது மோதியது. இதில் தூக்கி வீசப்பட்ட மனிஷ்ரதன் ரத்த வெள்ளத்தில் படுகாயம் அடைந்தார். அங்கிருந்தவர்கள் அவரை மீட்டு சிகிச்சைக்காக ஆசாரிப்பள்ளம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். அங்கு மனிஷ்ரதனை பரிசோதித்த டாக்டர்கள் அவர் ஏற்கனவே உயிரிழந்து விட்டதாக தெரிவித்தனர். இதையடுத்துஅவரதுஉடல்பிரேதபரிசோதனைக்காக கொண்டு செல்லப்பட்டது. இது குறித்து மனிஷ்ரதன் தாயார் மேரி எமல்டா சுசீந்திரம் காவல்நிலையத்தில் புகார் அளித்தார். புகாரின் பெயரில் சுசீந்திரம் போலீஸ் இன்ஸ்பெக்டர் இன்னோஸ்குமார், சப் இன்ஸ்பெக்டர் தனீஷ் லியோன் ஆகியோர் விசாரணை மேற்கொண்டு விசாரணையில் மனிஷ்ரதன் மீது மோதிய வாலிபர் பீச்ரோட்டை சேர்ந்த தீபக் வயது 18 என்பது தெரியவந்தது. அவர் மீது வழக்கு பதிவு செய்து விசாரணை செய்து வருகின்றனர்.



### தென்காசி தெற்கு மாவட்ட திமுக கலைஞர் அறிவாலயத்தில்

# மாவட்ட செயலாளர் ஜெயபாலன் தலைமையில் தூய்மை பணியாளர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா

தென்காசி,மே.14

தென்காசி மாவட்டம் மேலகரம் பேரூர் திமுக செயலாளர் சுடலை கடந்த வாரம் உடல்நல குறைவால் காலமானார் அவர் கடந்த பல ஆண்டுகளாக தென்காசி மாவட்டத்தில் திமுகவின் வளர்ச்சிக்காக கடுமையாக உழைத்தவர் இந்த ஆண்டும் தென்காசி சட்டமன்ற தொகுதியில் திமுகவின் வெற்றிக்காக பெரும்பங்கு ஆற்றினார் அவருடைய இழப்பு திமுகவிருக்கு ஈடு செய்ய முடியாதது அவரைப் போற்றும் வகையில் தென்காசி தெற்கு மாவட்ட திமுக கலைஞர் அறிவாலயத்தில் மறைந்த மேலகரம் பேரூர் திமுக செயலாளர் சுடலை திருவுருவப்படத்திற்கு தெற்கு மாவட்ட திமுக செயலாளர் ஜெயபாலன் தலைமையில் கட்சி நிர்வாகிகள் மாலை அணிவித்து மலர் தூவி அஞ்சலி செலுத்தினர் இதனை முன்னிட்டு நூற்றுக்கும் மேற்பட்ட தூய்மை பணியாளர்களுக்கு தெற்கு மாவட்ட திமுக செயலாளர் ஜெயபாலன் தலைமையில் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டன இந்நிகழ்ச்சியில் தென்காசி நகர் மன்ற தலைவர் சாதிர்,தெற்கு மாவட்ட திமுக துணைச் செயலாளர் கனிமொழி, கிழக்கு ஒன்றிய செயலாளர்அழகுசுந்தரம், மேலகரம் பேரூராட்சி துணைத் தலைவர் ஜீவானந்தம் மற்றும் திமுகவைச் சேர்ந்த முக்கிய நிர்வாகிகள் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.



### மார்த்தாண்டம் பஸ் ஸ்டாண்ட் அருகில்

# டாஸ்மார்க் கடையை மூட வலியுறுத்தி பொதுமக்கள் முற்றுகை போராட்டம்

மார்த்தாண்டம் மே 14

மார்த்தாண்டம் பஸ் ஸ்டாண்ட் அருகில் உள்ள டாஸ்மார்க் கடையை மூட வலியுறுத்தி பொதுமக்கள் முற்றுகை போராட்டம் நடத்தினர் இதனைத் தொடர்ந்து டாஸ்மார்க் கடை மூடப்பட்டது

தமிழக முதல்வராக விஜய் பொறுப்பேற்ற பிறகு வழிபாட்டுத்தலங்கள்,கல்விநிலையங்கள், பஸ் ஸ்டாண்ட் ஆகியவற்றில் இருந்து 500 மீட்டர் தொலைவில் மதுபானகடைகள்இருந்தால் இரண்டு வார காலத்திற்குள் மூட உத்தரவிடப்பட்டது.

மார்த்தாண்ட பஸ் ஸ்டாண்டிலிருந்து 5 மீட்டரில் தனியார் காம்ப்ளக்ஸில் மதுபான கடை எண் 4831 இயங்கி வருகிறது. பக்கத்தில் பார் உள்ளது. இந்த டாஸ்மாக் கடைக்கு அருகில் தனியார் ஆஸ்பத்திரி, பஸ் ஸ்டாண்ட், தொடக்கப்பள்ளி, மற்றும் பல்வேறு தனியார் நிறுவனங்கள் உள்ளது. மாலை வேளையில் பள்ளி கல்லூரி மாணவ மாணவிகள் மற்றும் பெண்கள் இந்த டாஸ்மார்க் கடையை கடந்து செல்வது வழக்கம்.

இந்த டாஸ்மார்க் கடை ஊரின் முகப்பு பகுதியில் உள்ளது இதை மூட வேண்டும் என நல்லூர் சாத்தானாங்குழி டாக்டர் அப்துல் கலாம் சமூக நல அறக்கட்டளை நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் தொடர்ந்து வலியுறுத்தி வந்தனர். ஆனால் அதிகாரிகள் கண்டு கொள்ளவில்லை. இதனைத் தொடர்ந்து பொதுமக்கள் ஆதரவுடன் இந்த டாஸ்மார்க் கடை முன் பகுதியில் நேத்து முற்றுகை போராட்டத்தில் ஈடுபட்டனர்.

குழித்துறை நகராட்சி சேர்மன் பொன்ஆசை தம்பி தலைமை வகித்தார். வர்த்தகசங்கமாநில நிர்வாகி கருங்கல் ஜார்ஜ், அப்துல் கலாம் சமூக நல அறக்கட்டளைதலைவர் கமலதாஸ், செயலாளர் பிராங்கிளின், பொருளாளர் பிரின்ஸ், மற்றும் நிர்வாகிகள் ஜோதி லிங்கராஜ், மேரி விஜயா, ஜானகி, கண்ணன் உட்பட ஏராளமான பெண்கள் குழந்தைகள் பங்கேற்றனர். மார்த்தாண்டம் நகர வர்த்த சங்கமும் ஆதரவு தெரிவித்து.

இதையடுத்து அதிகாரிகள் பேச்சுவார்த்தை நடத்தினர். இதனைத் தொடர்ந்து இந்த டாஸ்மார்க் கடை, பார் நிரந்தரமாக மூடப்பட்டது.

### போக்சோ, கொலை முயற்சி வழக்குகளில்

# 3 பேர் தடுப்பு காவல் சட்டத்தில் கைது

திருநெல்வேலி, மே. 14

திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி பகுதியில் போக்சோ வழக்கில் ஈடுபட்ட நாங்குநேரி வட்டம், கோவைகுளம்பகுதியை சேர்ந்தமுருகன்என்பவரின் மகன் இசக்கிபாண்டி (வயது 26) மற்றும் பாண்டி என்பவரின் மகன் முப்பிடாதி(30) ஆகிய 2 பேரும் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர். இவர்கள் மீது தமிழ்நாடு தடுப்பு காவல் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்குமாறு நாங்குநேரி அனைத்து மகளிர்காவல்நிலைய இன்ஸ்பெக்டர்சுதா, மாவட்ட எஸ்.பி.யிடம் வேண்டுகோள் விடுத்தார்.

அதேபோல், பாப்பாக்குடி பகுதியில் கொலை முயற்சி, அடிதடி மற்றும் மிரட்டல் வழக்கில் ஈடுபட்ட சேரன்மகாதேவி வட்டம், நந்தன்தட்டை பகுதியை சேர்ந்த சுப்பையா என்பவரின் மகன் பாலகிருஷ்ணன்(50) என்பவர் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். இவர் மீது தமிழ்நாடு தடுப்பு காவல் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்குமாறு பாப்பாக்குடி காவல் நிலைய இன்ஸ்பெக்டர்பரத்லிங்கம், மாவட்ட எஸ்.பி.யிடம் வேண்டுகோள் விடுத்தார்.

மேற்சொன்ன இன்ஸ்பெக்டர்களின் வேண்டுகோளின்படி, திருநெல்வேலி மாவட்ட எஸ்.பி. பிரசண்ணகுமார், மாவட்ட கலெக்டர் சுகுமாரிடம் பரிந்துரை செய்ததன் பேரில், கலெக்டர் உத்தரவின்படி நேற்று மேற்சொன்ன 3 பேரும் தமிழ்நாடு தடுப்பு காவல் சட்டத்தின் கீழ் பாளையங்கோட்டை மத்திய சிறையில் அடைக்கப்பட்டனர்.

திருநெல்வேலி மாவட்டத்தில் இந்த ஆண்டில் மட்டும் இதுவரை குற்றச்செயல்களில் ஈடுபட்ட 50 பேர் தமிழ்நாடு தடுப்பு காவல் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ளனர் என மாவட்ட காவல்துறை தெரிவித்துள்ளது.




# 4 வழிச்சாலை பணிக்காக காப்புக்காடு ஐரேனிபுரம் ரோடு துண்டிப்பு: போக்குவரத்தில் மாற்றம்

மார்த்தாண்டம் மே 14

கன்னியாகுமரி மாவட்டத்தில் 4 வழி சாலை பணிகள் கடந்த 20 ஆண்டுகளுக்கு மேலாக நடைபெற்று வருகிறது. தற்பொழுது திருவனந்தபுரம் செல்லும் பெரும்பாலான கார், லாரிகள்களியக்காவிளையிலிருந்து இந்த நான்கு வழிச்சாலை வழியாக செல்வது வழக்கம். இதனால் போக்குவரத்து நெருக்கடி இல்லாமல் எளிதில் செல்ல வாய்ப்பு ஏற்படுகிறது

கன்னியாகுமரி மாவட்டத்தில் நான்கு வழிச்சாலை பணி துரித வேகத்தில் நடந்து வருகிறது. சுங்கன்கடை பகுதியில் மேம்பாலம் அமைக்கப்பட்டு பணி வேகமாக நடக்கிறது பள்ளியாடி பகுதியில் ரோடு துண்டிக்கப்பட்டு அந்தப் பகுதியில் பாலம் கட்டும் பணி நிறைவடைந்து விட்டது. இதே போல் காப்புகாட்டிற்க்கும் ஐரேனிபுரத்திற்கும் இடைப்பட்ட பகுதியில் நான்கு வழிச்சாலை செல்கிறது.

இந்தப் பகுதியில் போக்குவரத்து சாலை தற்பொழுது துண்டிக்கப்பட்டு பணி வேகமாக நடந்து வருகிறது. இதனால் இந்தப் பகுதியில் செல்லும் வாகனங்கள் தற்காலிகமாக மாற்றுப்பாதை அமைக்கப்பட்டு திருப்பி விடப்பட்டுள்ளது. இந்த பணிகள் 3 மாதத்தில் இந்தப் பகுதியில் நிறைவடையும் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

## ஜோதிடர்களை அவமதித்த வன்னியரசுக்கு

# தென்னிந்திய ஜோதிடர்கள் நல சங்கம் சார்பில் ஆட்சியரிடம் மனு



கோவை மே:14

கோவை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் தென்னிந்திய ஜோதிடர்கள் நல சங்கம் சார்பில் ஜோதிடர்களை அவமதித்த வன்னியரசுக்கு எதிராக மனு அளிக்கப்பட்டது. அப்போது செய்தியாளர்களை சந்தித்த சங்க தென்னிந்திய ஜோதிடர்கள் நல சங்கத்தின் நிறுவன தலைவர் பிரசன்ன மணிகண்டன், "முதல்வர் ஜோசப் விஜய் தனது அரசியல் பிரிவு அலுவலராக ரிக்கிராதன் வெற்றிவேல் பண்டிட் அவர்களை நியமித்திருப்பது அவரது திறமை மற்றும் நீண்ட கால அரசியல் பயணத்தின் மீதான நம்பிக்கையின் அடிப்படையில் வழங்கப்பட்ட பொறுப்பாகும்.

"ஒருவர் ஜோதிடர் என்பதற்காக அவரது நியமனத்தை அறிவியலுக்கு எதிரானது என சித்தரிப்பது ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்று.

ஜோதிடம் என்பது வான் சாஸ்திரம், கணிதம் மற்றும் நாள்காட்டி முறைகளை அடிப்படையாகக் கொண்ட கலை.

தமிழகத்தில் பல லட்சம் ஜோதிடர்கள் மக்களின் அன்றாட வாழ்வில் நம்பிக்கையூட்டும் வழிகாட்டிகளாக செயல்பட்டு வருகின்றனர். கோடிக்கணக்கான மக்களின் நம்பிக்கையுடன் தொடர்புடைய ஜோதிடக் கலையை இழிவுபடுத்துவது ஒட்டுமொத்த ஜோதிட சமூகத்தையும் அவமதிப்பதாகும் என்றும், அரசியல் விமர்சனங்களின் பெயரில் மத நம்பிக்கைகள் மற்றும் தொழில்களை புண்படுத்தும் வகையில் பேசுவது அரசியல் நாகரீகத்திற்கு ஒவ்வாதது. மேலும் வன்னியரசு தனது பேச்சுக்காக பகிரங்கமாக மன்னிப்பு கேட்க வேண்டும் என்றும், தவறினால் தென்னிந்திய ஜோதிடர்கள் நல சங்க நிர்வாகக் குழு கூடி மாநிலம் தழுவிய அளவில் போராட்டங்களை முன்னெடுக்க முடிவு செய்யும் என்றும் எச்சரிக்கை விடுத்தார்.

# புத்தளம் அருகே தாய் மகன் மீது தாக்குதல் 4 பேர் மீது வழக்கு

புத்தளம், மே. 14

புத்தளம் அருகே உள்ள கல்லடிவிளை பகுதியை சேர்ந்தவர் காசிராஜன் இவரது மனைவி அபிநய உஷா வயது 38, இவர்கள் இருவரும் காதலித்து திருமணம் செய்து கொண்டவர்கள். இவர்களுக்கு ஸ்ரீஜித் வயது 17 என்ற மகன் உள்ளார். இவர்களுக்கும் அம்மாண்டிவிளயை சேர்ந்த கிருஷ்ணதங்கம் வயது 45, நிர்மலா வயது 39, கல்லடிவிளையை சேர்ந்த ஆதிலிங்கம் வயது 46, நல்லூரை சேர்ந்த ரோகிணி வயது 43 ஆகியோருக்கும் இடையே முன்விரோதம் இருந்து வந்தது.

இந்த நிலையில் சம்பவத்தன்று இவர்கள் 4 பேரும் அத்துமீறி அபிநய உஷா வீட்டிற்கு சென்று அவரையும் அவரது மகன் ஸ்ரீஜித்தையும் தாக்கியதாக தெரிகிறது.

இதில் அபிநய உஷா மற்றும் ஸ்ரீஜித் ஆகியோர் காயமடைந்தனர். இதுகுறித்து அபிநய உஷா சுசீந்திரம் காவல் நிலையத்தில் புகார் அளித்தார். புகாரின் பேரில் சுசீந்திரம் போலிசப் இன்ஸ்பெக்டர் தனிஷ் லியோன் கிருஷ்ணதங்கம், ஆதிலிங்கம், ரோகிணி, நிர்மலா ஆகிய 4 பேர் மீதும் வழக்கு பதிவு செய்து விசாரணை செய்து வருகின்றனர்.

# இந்து முன்னணி கட்சி மாநிலத் தலைவர் காடேஸ்வரா சுப்பிரமணியம் செய்தியாளர் சந்திப்பு



கோவை மே:14

கோவை ராம்நகர் பகுதியில் உள்ள இந்து முன்னணி அலுவலகத்தில் அக்கட்சியின் மாநிலத்தலைவர்காடேஸ்வராசுப்பிரமணியம் செய்தியாளர்களைச் சந்தித்தார். அப்போது பேசிய அவர் எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலினுக்கு அவர் கடும் கண்டனத்தை தெரிவிப்பதாகவும் சனாதனத்திற்கு எதிரா க உதயநிதி ஸ்டாலின் பேசி வருவதாக குறிப்பிட்டார். உதயநிதி ஸ்டாலின் தொடர்ந்து இந்துக்களுக்கு எதிராகச் சிறுபிள்ளைத்தனமாகப் பேசி வருவதாகவும், ஏற்கனவே ஜாமீனில் இருக்கும் அவர் இத்தகைய கருத்துகளால் இந்துக்களின் வாக்குகளை இழந்து வருவதாகவும் கூறினார். உதயநிதி ஸ்டாலினின் இந்தப் பேச்சைக் கண்டித்து வரும் 17ஆம் தேதி ஆர்ப்பாட்டம் நடத்தப்படும் என்று அறிவித்தார். புதிய முதலமைச்சராகப் பொறுப்பேற்றுள்ள ஜோசப் விஜய்க்கு வாழ்த்துகளைத் தெரிவித்து கொண்ட காடேஸ்வரா சுப்பிரமணியம், மத பாகுபாடு இல்லாமல் அரசு செயல்படும் என்ற அவரது உறுதிமொழியை வரவேற்றபதாகவும் டாஸ்மாக் கடைகளைக் குறைக்க விஜய் எடுத்துள்ள நடவடிக்கைகளுக்குப் பாராட்டுத் தெரிவித்து கொள்வதாகவும் கூறினார்.

முந்தைய அரசு இந்து பண்டிகைகளுக்கு வாழ்த்து தெரிவிக்காத நிலையைச் சுட்டிக் காட்டிய அவர், கடவுள் நம்பிக்கை கொண்டவரான விஜய், அனைத்து இந்து பண்டிகைகளுக்கும் பாகுபாடின்றி வாழ்த்து தெரிவிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். சபாநாயகர் தனது உரையில் பைபிள் வாசகங்களை மட்டும் கூறாமல், பகவத் கீதை மற்றும் குர்ஆன் வாசகங்களையும் குறிப்பிட்டிருப்பதைச் சுட்டிக்காட்டிய, அதுவே சரியான அணுகுமுறை தான் என்றார். விஜய்யின் ஆட்சி குறித்துக் கருத்துத் தெரிவித்த அவர், ஆறு மாத காலத்திற்குப் பிறகுதான் ஆட்சியின் முழுமையான செயல்பாடுகள் தெரியவரும் என்றார்.

தனது ஜோதிடரை அரசு பதவியில் நியமித்த முடிவை விஜய் திரும்பப் பெற்றிருக்கத் தேவையில்லை எனக் குறிப்பிட்ட அவர், விசிக மற்றும் கம்யூனிஸ்ட் கட்சிகளின் ஆதரவை நம்பினால் ஓராண்டு கூட ஆட்சி நிலைக்காது என்றார். மேலும், மக்கள் மாற்றத்தை விரும்பி விஜய்க்கு வாக்களித்துள்ளார்கள் அவரது கட்சியினர் பணம் கொடுக்காமல் வெற்றி பெற்றுள்ளதாகவும் தெரிவித்தார். இறுதியாக அண்ணாமலை மீண்டும் பாஜக தலைவராவோ அல்லது மத்திய அமைச்சராகவோ வர வாய்ப்புள்ளதாகவும், தமிழகத்தில் பாஜக இன்னும் தீவிரமாகக் களப்பணியாற்ற வேண்டும் என்று தெரிவித்தார்.

# இந்திய அரசின் பத்ம விருதுகளுக்கு விண்ணப்பிக்க மாவட்ட ஆட்சியர் அறிவிப்பு

நாகர்கோவில், மே.14

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் அழகு மீனா வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் கூறியிருப்ப தாவது:

இந்திய அரசு மூலம் சிறந்த சாதனையாளர் நலனுக்கான பத்ம விருதுகள் பத்மவிபூஷன், பத்மபூஷன் மற்றும் பத்மஶ்ரீ ஆகிய விருதுகள் ஆண்டுதோறும் குடியரசு தின நாட்களில் வழங்கப்படுகிறது. தற்போது 20262027 ஆம் ஆண்டுக்கு கலை, இலக்கியம், கல்வி, விளையாட்டு, மருத்துவம், சமூக சேவை, அறிவியல், பொறியியல், பொது நலத்தொண்டு, குடிமைசேவை, வர்த்தகம் மற்றும் தொழில்கள், தொழிற்சாலைகள் ஆகிய துறைகளில் சிறந்த சாதனைபடைத்த சாதனையாளர்களிடமிருந்து பத்ம விருதுக்கான விண்ணப்பங்கள் இணையதள(https://awards.gov.in) வாயிலாக வரவேற்கப்படுகின்றன. விண்ணப்பித்த விண்ணப்பதாரர்கள் அதன் விபரத்தினை மாவட்ட சமூகநல அலுவலகம், மாவட்ட ஆட்சியர் வளாக இணைப்பு கட்டிடம், நாகர்கோவில் என்ற முகவரியில் அலுவலக வேலை நாட்களில் சமர்ப்பிக்குமாறு தெரிவிக்கப்படுகிறது. 30.06.2026 தேதிக்கு பின்வரும் விண்ணப்பங்கள் தகவலின்றி நிராகரிக்கப்படும். இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்துள்ளார்.

## குறும்பனை கடற்கரை பகுதியில்

# கடலில் மூழ்கிய பள்ளி மாணவி 2ம் நாளாக தேடும் பணி தீவிரம்

நாகர்கோவில், மே .14

குமரி மாவட்டத்தில் தற்போது கோடை விடுமுறை காலமாக உள்ளதால் மாவட்டத்தில் உள்ள அனைத்து சுற்றுலாத் தலங்களிலும் காலை மற்றும் மாலை வேலைகளில்அதிகஅளவில்மக்கள்குவிந்துவருகிறார்கள். கன்னியாகுமரி, முட்டம், சொத்த விளை, பாரியக்கல் பீச், உள்ளிட்ட கடற்கரை பகுதிகளில் மக்கள் அதிக அளவில் வந்து கடலழகை ரசிப்பார். இந்த நிலையில் கருங்கல் அருகே பாலப் பள்ளம் பகுதி சேர்ந்த முருகன் என்பவரும் தனது மகள் சுருதி (14)மற்றும் 9 வயது மகனுடனும், அவரது நண்பரான சுஜி லாரன்ஸ், அவரது மனைவி ராஜேஸ்வரி, மகன் சுஜித் (14 )ஆகியோர் உட்பட 9 பேர் குறும்பனை அருகில் உள்ள பாரியக்கல் கடற்கரை பகுதியில் நேற்று முன்தினம் மாலையில் வந்திருந்தனர். பெரியவர்கள் கடற்கரையில் இருக்க, குழந்தைகள் கடலில் விளையாடிக் கொண்டிருந்தனர். அப்போது திடீரென சுருதி மற்றும் அஜித் ஆகியோரை கடல் அலை இழுத்து சென்றது. இதை பார்த்ததும் கரையில் இருந்த பெற்றோர், உறவினர்கள் கூச்சலிட்டனர். அந்த பகுதியில் உள்ள மீனவர்கள் உடனடியாக கடலுக்குள் இறங்கி அவர்களை மீட்க முயன்றனர். சிறிது நேரத்தில் சுஜித்தை அலை கரையில் கொண்டு வந்து வீசி உள்ளது. அதனால் ச சுருதி கடலில் மாயமானார். இது குறித்து தகவல் அறிந்ததும் குளச்சல் கடலோர காவல் நிலைய போலீசார் மற்றும் குளச்சல் தீயணைப்புத் துறையினர் சம்பவ இடத்திற்கு வந்து அவர்கள் சுருதியை தேடும் பணியில் ஈடுபட்டனர். ஆனால் போதிய வெளிச்சம் இல்லாததால் தேடும் பணி நிறுத்தப்பட்டது. நேற்று மீண்டும் 2வது நாளாக தேடும் பணி தொடர்ந்து நடைபெற்றது. சுருதி 9ம் வகுப்பு படித்து வருகிறார். மாணவியின் உறவினர்கள் கடற்கரையில் கண்ணீருடன் அமர்ந்திருந்து பெரும் சோகத்தை ஏற்படுத்தியது.

## தண்டவாளத்தில் கிடந்த இரும்பு ஏணியில்

# ரயில் மோதிய சம்பவம் இருவர் கைது



கோவை, மே. 14

கோவை வடக்கு மற்றும் பீளமேடு ரயில் நிலையங்களுக்கு இடையேயான தண்டவாளத்தில் அலுமினிய ஏணியை வைத்த விவகாரத்தில், இருவரை ரயில்வே பாதுகாப்புப் படை போலீஸாா் கைது செய்துள்ளனர்.

கடந்த மே 9ஆம் தேதி மாலை 5.30 மணி அளவில் அதிவிரைவு ரயில் வந்தது. அப்போது, தண்டவாளத்தில் வைக்கப்பட்டிருந்த அலுமினிய ஏணி மீது அந்த ரயில் மோதியுள்ளது. இதனால், அவசர கால பிரேக் மூலம் ரயில் நிறுத்தப்பட்டது. சேதமடைந்த அந்த ஏணியை பாதுகாப்புப் படையினா் அப்புறப்படுத்தினர். பின்னா், அந்த ரயில் மீண்டும் அங்கிருந்து புறப்பட்டுச் சென்றது.

இதுதொடா்பாக ரயில்வே பாதுகாப்புப் படை போலீஸாா் வழக்குப் பதிவு செய்து தீவிர விசாரணை நடத்தினா். மேலும், அந்தப் பகுதியில் பொருத்தப்பட்டிருந்த கண்காணிப்பு கேமராக்களை ஆய்வு செய்தபோது, அதில் இருவரது உருவம் பதிவாகியிருந்தது. இதைத்தொடா்ந்து ரத்தினபுரி ரயில்வே மேம்பாலப் பகுதியில் ரயில்வே பாதுகாப்புப் படை மற்றும் குற்றப் புலனாய்வுப் பிரிவினா் ரோந்து பணியில் ஈடுபட்டிருந்தனா்.

அப்போது அந்தப் பாலத்துக்கு அடியில் சந்தேகத்துக்கு இடமளிக்கும் வகையில் தங்கியிருந்த வீரகேரளம் பகுதியைச் சோ்ந்த நாகராஜ் (35), காரமடை பகுதியைச் சோ்ந்த கந்தசாமி (45) ஆகிய இருவரைப் பிடித்து விசாரணை நடத்தினா். மேலும் கண்காணிப்பு கேமரா காட்சிகளையும் ஆய்வு செய்தபோது இவா்களின் உருவம் ஒத்துப்போனது.

இதையடுத்து அவா்களிடம் நடத்தப்பட்ட விசாரணையில், மது பாட்டில்கள் மற்றும் பழைய இரும்புப் பொருள்களை சேகரித்து விற்பனை செய்யும் இவா்கள், கடந்த 9ஆம் தேதி ஓா் அலுமினிய ஏணியை பழைய இரும்புக்கடையில் விற்க முயன்றுள்ளனா். ஆனால், கடைக்காரா் அதை முழுமையாக வாங்க மறுத்து, துண்டு துண்டாக கொண்டுவருமாறு கூறியதால். இவ்வாறு செய்ததாக கைதான இருவரும் கூறியுள்ளனர். இதையடுத்து, இருவரையும் போலீஸாா் கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜா்படுத்தி பின்னா் சிறையில் அடைத்தனா்.



## குமரியில்

# கால்வாய் புனரமைப்பு பணிகளை கலெக்டர் நேரில் ஆய்வு

நாகர்கோவில், மே.14

கன்னியாகுமரி மாவட்ட நீர்வளத்துறை சார்பில் இரணியல் மற்றும் கருங்கல் கிளைகால்வாய் புனரமைப்பு பணி மற்றும் நெய்யாறு கால்வாய் நிரந்தர தடுப்பு பணிகளை பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் அழகுமீனா நேரில் பார்வையிட்டு மேற்கொண்டார்.

மாவட்ட நீர்வளத் துறை சார்பில் கல்குளம் வட்டத்திற்குட்பட்ட இரணியல் பிரிவு கால்வாய் மற்றும் அதன் கிளைக் கால்வாய்கள் புனரமைத்தல் பணி ரூ.6 கோடி மதிப்பில் நடைபெற்று வருகிறது. மேலும் கிள்ளியூர் வட்டத்திற்குட்பட்ட கருங்கல் கிளை கால்வாய் மற்றும் அதன் சார்பு வாய்க்கால்களை புனரமைத்தல் பணிக்கு கிள்ளியூர் சட்டமன்ற தொகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூ.6.50 கோடி மதிப்பீட்டில் நிதி ஒதுக்கீடு செய்து பணிகள் நடைபெற்று வருகிறது. இப்பணியானது தற்போது வரை 4800 மீட்டர் நீளத்தில் சிமெண்ட் கான்கிரீட் லைனிங், 1570 மீட்டர் நீளத்தில் பீனிங், 180 $மீ^2$ பிளாஸ்டரிங், 119 மீட்டர் தடுப்புச் சுவர், 16.50 மீட்டர் தடுப்பு சுவர் உயர்த்தும் பணிகள் என மொத்தம் 45% பணிகள் முடிக்கப்பட்டுள்ளது.

தொடர்ந்து நெய்யாறு பிரதான கால்வாய் நெடுகை நீளம் 9/825 கிமீ தொலைவில் மரியகிரி பகுதியில் ரூ.80.00 இலட்சம் மதிப்பில் கரையில் தடுப்புச் சுவர்கள் கட்டுதல் மற்றும் வெள்ள நீர்ஊருக்குள் புகாதவாறு தடுப்பணைகள் அமைத்தல் உள்ளிட்ட நிரந்திர வெள்ளதடுப்பு பணிகள் நடைபெற்று வருகிறது. இந்த பணிகளை மாவட்ட ஆட்சியர் நேற்று நேரில் ஆய்வு மேற்கொண்டார். நடைபெற்று வரும் அனைத்து பணிகளையும் மழைக் காலத்திற்கு முன்பாக விரைந்து முடிக்க நீர்வளத்துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

நடைபெற்ற ஆய்வுகளில் கோதையாறு வடிநில கோட்ட செயற்பொறியாளர், ஆ.வசந்தி, உதவி செயற்பொறியாளர் ம.கிறிஸ்டோபர் ஜோசப், துறை அலுவலர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

# தூத்துக்குடியில் லாரிகள் மோதி கோர விபத்து: டிரைவர் படுகாயம்



தூத்துக்குடி, மே.14

தூத்துக்குடி அருகே நான்கு வழிச்சாலையில் கண்டெய்னர் லாரியும், நிலக்கரி ஏற்றிச் சென்ற லாரியும் நேருக்கு நேர் மோதிபள்ளத்தில்கவிழ்ந்த விபத்தில், கண்டெய்னர் லாரி டிரைவர் படுகாயமடைந்தார்.

சென்னையிலிருந்து கார் உதிரிபாகங்களை ஏற்றிக் கொண்டு கண்டெய்னர் லாரி ஒன்று தூத்துக்குடி குறுக்குச்சாலையில் உள்ள கிடங்கிற்கு வந்தது. அங்கு லோடை இறக்கிவிட்டு, மீண்டும் தூத்துக்குடி நோக்கி நான்கு வழிச்சாலையில் சென்றுகொண்டிருந்தது. லாரியை சென்னை சத்தியமூர்த்தி நகரைச் சேர்ந்த போர்ராஜ் (வயது 45) என்பவர் ஓட்டிச் சென்றார். வாலசமுத்திரம் அருகே லாரி வந்தபோது, எதிர்பாராதவிதமாக டிரைவரின் கட்டுப்பாட்டை இழந்த கண்டெய்னர் லாரி, சாலையின் நடுவே இருந்த தடுப்புச் சுவரை உடைத்துக் கொண்டு மறுபுறம் பாய்ந்தது. அப்போது அந்த லாரி தூத்துக்குடியிலிருந்து திருச்சி நோக்கி நிலக்கரி ஏற்றி வந்த மற்றொரு லாரியின் மீது பலமாக மோதியது.

மோதிய வேகத்தில் இரண்டு லாரிகளும் கட்டுப்பாட்டை இழந்து சாலையோரப் பள்ளத்தில் தலைகுப்புறக் கவிழ்ந்தன. இதில் கண்டெய்னர் லாரி டிரைவர் போர்ராஜ் இடிபாடுகளுக்குள் சிக்கிப் படுகாயமடைந்தார். நிலக்கரி லாரியை ஓட்டி வந்த ஓட்டப்பிடாரம் இந்திராநகரைச் சேர்ந்த மாரிச்செல்வம்(28) அதிர்ஷ்டவசமாக எவ்வித காயமுமின்றி உயிர் தப்பினார்.

இந்த விபத்து குறித்த தகவல் அறிந்து புதியம்புத்தூர் போலீஸ் இன்ஸ்பெக்டர் சுந்தரமூர்த்தி தலைமையிலான போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்தனர். படுகாயமடைந்த போர்ராஜை மீட்டு சிகிச்சைக்காக தூத்துக்குடி அரசு மருத்துவமனையில் சேர்த்தனர். அங்கு அவருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. இந்த விபத்து குறித்து புதியம்புத்தூர் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். இந்த விபத்து காரணமாக அப்பகுதியில் சிறிது நேரம் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

## பறக்கை அருகே

# மெழுகுவர்த்தி கொளுத்தும் போது தீப்பிடித்ததில் சிகிச்சையில் இருந்த பெண் பரிதாப பலி

பறக்கை, மே. 14

பறக்கை அருகே உள்ள புல்லுவிளை மெயின்ரோட்டைசேர்ந்தவர்சுந்தரலிங்கம் இவரது மகள் ராதிகா வயது 42 இன்னும் திருமணம் ஆகவில்லை சம்பவதன்று ( 85 2026) இரவு ஏழு முப்பது மணி அளவில் திடீரென வீட்டில் கரண்ட் போய்விட்டது

உடனே ராதிகா வீட்டில் இருந்த மெழுகுவர்த்தியைஎடுத்துகொளுத்தும்பொழுது எதிர்பாராத விதமாக ராதிகா துணியில் தீப்பிடித்தது

இவரது அலறல் சத்தம் கேட்டு அக்கம் பக்கத்தினர் ஓடி வந்து இவரை மீட்டு நாகர்கோவில் அருகே உள்ள தனியார் மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தனர் சிகிச்சையில் இருந்த ராதிகா நேற்று முன்தினம் நள்ளிரவு பரிதாபமாக இறந்து போனார். இதுகுறித்து அவரது தாயார் தங்கலெட்சுமி சுசீந்திரம் காவல் நிலையத்தில் புகார் அளித்தார். புகாரின் பேரில் சுசீந்திரம் போலீஸ் இன்ஸ்பெக்டர் இன்னோஸ்குமார் சப்இன்ஸ்பெக்டர் தனீஷ்லியோன் ஆகியோர் வழக்கு பதிவு செய்து விசாரணை செய்து வருகின்றனர்.

DHINA TAMIL DAILY : Published and Printed By Rajasingh, Published from 16 C, 246 Cross, Professor Joseph Street, Simon Nagar, Nagercoil - 629001.
Printing at Sree Murugan Printers, 209/A, Vaithyanathapuram, Kottar Post, Nagercoil - 629002. Ph : 99944 66200. Editor : Rajasingh. All Claims are subject to the Nagercoil Jurisdiction.